# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2449/27 - 2025 අගෝස්තු මස 13 වැනි බදාදා - 2025.08.13

*2449/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 16/2016* (A)

**(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்**

21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், தேசிய நலன் பற்றிய அவசியத்தைக் கருத்திற்கொண்டு, வணிகக் கலன்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பனிகளுக்கு சேவைகளையும், வசதிகளையும் வழங்குவதற்கான சமுத்திரப் பாதுகாப்பு தொழிற்பாட்டு கருத்திட்டமொன்றை பேணுவதற்கும், இலங்கை கடற்படையின் ஆயுதக் களஞ்சியங்களுள்ள வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பெனிகளுக்குச் சொந்தமான துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு, பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின்கீழ் தோதானதான சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் தொழிற்பாட்டு ரீதியிலான நிருவாக மற்றும் நிதிசார் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் ; இலங்கை கடற்படையின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு என்பவற்றின்கீழ் வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பெனிகளின் உள்நாட்டுப் பிரதிதிதிகளினால் வழங்கப்பட்ட வாகனங்கள் அல்லது கலன்களைப் பயன்படுத்துகின்ற தொழிற்பாட்டு ரீதியிலான தேவைப்பாடுகளின் மூலம் தேவைப்படுத்தப்பட்டதான வெளிநாட்டு தனியார் சமுத்திரப் பாதுகாப்புக் கம்பெனிகளுக்குச் சொந்தமான துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொண்டு செல்வதற்கும் அதற்கான கடற்படையல்லாத கடமைகளான அவற்றோடு இணைந்த அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களையும் நிறைவேற்றுவதற்கும் இலங்கைக் கடற்படையின் உறுப்பினர்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி.

கொழும்பு,
*2025, ஓகத்து 10.*

EOG 08 - 0133


1A - G 45111 — 05 (2025/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*